[1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது நம்முடைய சொந்தக் கட்டடத்தில்தான் இருக்கிறது. நாம் மவுண்ட் ரோடில் வாங்கிய கட்டடத்தில் கோ-ஆப்டெக்ஸ் ஸாரி மியூஸியம் துவங்கப்பட்டது. அதற்கு 1,000 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது. நமக்கு 767½ ரூபாய் வாடகை வருகிறது. நாம் அந்தக் கட்டடத்தை வாங்கியவுடனே அங்கே குடியிருக்கிற நபர்களை வெளியேற்ற முடியவில்லை. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். உயர் நீதிமன்றம் நமக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதற்கு மேலே உயர்நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

காஞ்சிபுரத்தில் சரிகை தயாரிக்கும் பிரிவு

* 288 **வினா.—திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்று நிறுவப் பெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): இல்லை.

காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்ற தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காகிதத் தொழிற்சாலைகள்

* 289 **வினா.—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை (Paper factory) நிறுவும் எண்ணம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

* 290 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a paper factory at Hosur Taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இடமில்லை.

•